அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் - நோர்வே

அன்னைத் தமிழ்முற்றப் போட்டி 2026

பேச்சு 2016 ஆம் ஆண்டு பிறந்த மாணவர்கள்

**வளாகங்களில் முதல் மூன்று நிலைகளையும் அடைந்த மாணவர்கள் அன்னைத் தமிழ்முற்றப் போட்டியில் பங்குபெறும் வாய்ப்பைப் பெறுவார்கள்.**

# மாவீரர்

தமிழீழத் தாய்நாட்டின் விடிவுக்காக தமது இன்னுயிர்களை ஈகம் செய்தவர்கள். ஈழத்தமிழர் இதயமெல்லாம் என்றும் நிறைந்து நிற்பவர்கள். அடிமைப்பட்டுக் கிடந்த எமது மண்ணை, அடங்கா மண்ணாக மாற்றிய மாவீரர்கள். எமது தேசம் விடுதலை பெற்று, எம்மக்கள் சுதந்திரமாக வாழ்வதற்காக களமாடிய புனிதர்கள். இவர்கள் எம் ஈழ மண்ணிலே பிறந்து, வளர்ந்து, வாழ்ந்தவர்கள்.

புறநானூறில் தமிழர் வீரத்தைப் படித்தோம் நாம். ஆனால் அவ்வீரத்தைத் தமிழீழத்தில் படைத்தார்கள் நம் மாவீரர்கள். ஈழத்தில் தமிழர்களுடைய உரிமை மறுக்கப்பட்டது ; அரசியல் அபிலாசைகள் நசுக்கப்பட்டது; தமிழ்மொழி ஒதுக்கப்பட்டது; தமிழர் பகுதியில் திட்டமிட்ட குடியேற்றங்கள்; இவ்வாறு தமிழர்களை அடிமைப்படுத்த நினைத்தவர்களிடமிருந்து, தமிழ்மண்ணையும் தமிழர்களையும் காக்க, போராடி வீரச்சாவடைந்த எம்மினக் காவலர்களே மாவீரர்கள்.

ஆம், இவர்களது உன்னத இலக்கினை அடைய, புலம்பெயர் தமிழர்களாகிய நாம், அனைவரும் ஒன்றிணைந்து உழைக்க வேண்டும். இது எமது கடமை. எம்மண்ணையே காதலித்து, எம்மண்ணிற்காக மடிந்து, எம்மண்ணிலேயே உறங்குகின்றார்கள். அவர்கள் பள்ளி கொள்ளும் மண் எமக்கே உரித்தான மண். எமக்கே சொந்தமான மண்.

தமிழீழத்தின் விடுதலைக்காய் வீரச்சாவடைந்த மாவீரர்களை நினைவு கொள்ளும் நாள் கார்த்திகை 27. இவ் எழுச்சி நாளே மாவீரர் நாளாகும். இதுவே தமிழீழத்தின் தேசியநாள். வருடந்தோறும் இப் புனிதநாளை தமிழினம் நினைவு கூர்ந்து வருகின்றது.

«மாவீரர் கனவு ஒருநாள் நனவாகும்.»

நன்றி! வணக்கம்.

**அனைத்து மாணவர்களுக்கும் இப்பிரதி வழங்கப்படுகிறது.**
**அனைத்து மாணவர்களையும் ஊக்கப்படுத்துவது ஆசிரியர் கடமை.**
**மாணவர்களை தயார்படுத்துவது பெற்றோரின் கடமை.**